1972 ஆகஸ்ட் 19]

ஈடுபட வேண்டுமென்ற முறையில் அவர்கள் ஒவ்வொருவரும் ரூ. 10 கட்டணம் செலுத்த வேண்டுமென்று போட்டிருக்கிறார்கள். அந்தப் பயிற்சிக்காக நேரம் ஒதுக்கப்பட்டு, அதற்காகவே பயிற்சி பெற்ற உடற்பயிற்சி ஆசிரியை கூட நியமிக்கப்பட்டிருக்கிறார்கள். அந்த வகையில் தான் கட்டணம் விதிக்கப்பட்டிருக்கிறது. இதிலே கல்லூரிக் கல்வி இயக்குநர் தலையிட்டு இந்தக் கட்டணம் விதிக்க வேண்டாமென்று சொல்லுவதற்கு வழியில்லை. பல்கலைக் கழகம் தான் இதுபோன்ற காரியங்களில் தலையிட்டு ஏதாவது செய்ய வேண்டியிருக்கிறது.

திரு. கே. எஸ். அப்துல் வகாப் : தலைவரவர்களே, எத்தனை மகளிர் கல்லூரிகளில் நீச்சல் குளங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, இப்போது இந்தக் கல்லூரியில் தான் இந்த மாதிரிக் கட்டணம் விதிக்கப்படுகிறது. கிட்டத்தட்ட ரூ. 2 லட்சம் செலவில் நீச்சல் குளம் கட்டப்பட்டு, ஆண்டு ஒன்றுக்கு ரூ. 20 ஆயிரம் செலவில் அது பராமரிக்கப்பட்டு வருகிறது. அந்தப் பயிற்சிக்காக தனியாக டைரக்டரெஸ் ஒருவரும் நியமிக்கப்பட்டிருக்கிறார், அதற்கான வசதி வாய்ப்புகளும் இருக்கின்றன என்று தான் கூறப்படுகிறது.

Car for the Worshipful Mayor of Madras

* 79 *Q.*—THIRU K. RAJARAM (on behalf of THIRU V. ISVARMURTI) : Will the Hon. the Minister for education and Local Administration be pleased to state—

(*a*) whether the Mayor of Madras has been permitted to have an imported car for her use; and

(*b*) if so, the details thereof?

பெருந்தகை மாநகர் மேயருக்கு கார்

திரு. கே. ராஜாராம் (திரு. வ. ஈஸ்வரமூர்த்தி சார்பில்) : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க் கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) இறக்குமதி செய்யப்பட்ட ஒரு காரைப் பயன்படுத்திக் கொள்ள சென்னை மேயருக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளதா ?

(இ) ஆமெனில், அது குறித்த விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) வணக்கத்திற்குரிய மாநகர் மேயர் அவர்கள் இறக்குமதி செய்யப்படும் சீருந்து வேண்டுமென முன்னர் கோரினார்கள்.

(இ) வணக்கத்திற்குரிய மாநகர் மேயர் அவர்கள் ஒரு அம்பாசிடர் (சீருந்து) **Car** மட்டும் தற்போது கோரியுள்ளார். இஃது கவனிப்பிலுள்ளது.

Town Hall, Madurai

* 80. Q.—THIRU S. VELLAPANDIAN : Will the Hon. the Minister for Education and Local Administration be pleased to state—

(a) whether there are proposals under the consideration of the Government to construct a Town Hall in Madurai; and

(b) if so, the details thereof?

நகர மண்டபம், மதுரை

திரு. எஸ். வெள்ளப்பாண்டியன் : மாண்புமிகு கல்வி-உள்ளாட்சி நிர்வாக அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) மதுரையில் நகர மண்டபம் ஒன்று கட்டும் செயற்குறிப்புகள் அரசின் பரிசீலனையிலுள்ளனவா ?

(இ) ஆமெனில், அவற்றின் விவரங்கள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : (அ) மதுரையில் நகர மண்டபம் கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் இல்லை. ஆனால், நகர மண்டபம் கட்டுவதற்கான திட்டம் மதுரை மாநகராட்சியின் பரிசிலனையில் உள்ளது.

(இ) இத்திட்டம் குறித்த மனைப்பிரிவு நகரமைப்பு இயக்குநரின் பரிசீலனையில் உள்ளது.